பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 08 2026 SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** உஸ்பெகிஸ்தானின் உயரிய விருது பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.** மத்திய அரசுடன், மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால் விரைவான வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

**3.** சிலி உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** மணிப்பூரில் ஏழு தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

**5.** புனே சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், நான்கு வெள்ளி பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

உஸ்பெகிஸ்தானின் உயரிய விருது பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசு முறைப்பயணமாக உஸ்பெகிஸ்தான் சென்றுள்ள பிரதமருக்கு இவ்விருதினை அந்நாட்டு அதிபர் திரு **Shavkat Mirziyoyev** வழங்கினார்.

இந்த விருதினை பெறுவது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவுக்கு இவ்விருதினை சமர்ப்பிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இதனைத்தொடர்ந்து, அந்நாட்டு அதிபருடன் அவர் பேச்சு நடத்தினார்.

இதன்பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

உஸ்பெகிஸ்தான் உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

யுரேனியம் விநியோகம் தொடர்பான நீண்டகால ஒத்துழைப்புக்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருநாடுகளின் வெளியுறவு செயலர்கள் நிலையிலான ஒருங்கிணைப்புக்குழுமம், அமைச்சர்கள் நிலைக்கு உயர்த்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான உச்சிமாநாடுகளை இணைந்து நடத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

உஸ்பெகிஸ்தானின் சுதந்திர தினம் வரும் ஒன்றாம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி அந்நாட்டு மக்களுக்கு முன்கூட்டியே வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

உஸ்பெகிஸ்தான் அதிபர் பேசுகையில், உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

திரு நரேந்திர மோடியின் தலைமை பண்பே இதற்கு காரணம் என்று அவர் கூறினார்.

உயர் பொருளாதார வளர்ச்சியை இந்தியா கண்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப பயன்பாட்டிலும் இந்தியா முன்னிலையில் திகழ்வதாக அவர் கூறினார்.

இந்தியாவின் சாதனைகளை கண்டு உஸ்பெகிஸ்தான் பெருமிதம் கொள்வதாகவும் திரு **Shavkat Mirziyoyev** தெரிவித்தார்.

இந்த பேச்சுக்களுக்கு பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

சுரங்கம், ஆயுர்வேதம், சுற்றுலா, பாதுகாப்பு, உயர்கல்வி, சுற்றுச்சூழல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும்நோக்கில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் ஐந்து மடங்காக அதிகரிப்பது என்றும் இருநாடுகளும் முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

உஸ்பெகிஸ்தானின் உயரிய விருது பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது நாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமிதம் அளிக்கக்கூடியது என்று பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பிரதமரின் தலைமைப்பண்புக்கு உலக அளவில் தொடர்ந்து கிடைத்துவரும்

அங்கீகாரத்தின் வெளிப்பாடாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், திரு பிரல்ஹாத் ஜோஷி, திருமதி நிர்மலா சீதாராமன், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட பலரும் இந்த விருது பிரதமருக்கு வழங்கப்பட்டதற்காக வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

மத்திய அரசோடு, மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால் விரைவான வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசின் திட்டங்களுக்கு உத்தரப்பிரதேச அரசு முழுமையாக ஒத்துழைப்பு அளிப்பதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக உத்தரப்பிரதேசத்தில் வளர்ச்சித் திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

லக்னோவின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச வளர்ச்சியில் லக்னோ முக்கிய பங்கு வகித்து வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் மன் கி பாத் உரை இளையோருக்கு உத்வேகம் அளிப்பதாக ஒடிஷா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

இன்று புவனேஷ்வரில் பிரதமர் உரையை கேட்டபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பல்வேறு தரப்பினரின் சாதனைகளை பிரதமர் இந்த நிகழ்ச்சியில் எடுத்துரைப்பதாக அவர் கூறினார்.

இது அனைவருக்கும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று திரு மோகன் சரண் மாஜி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இளையோர் நலனுக்கான பொது விவாதங்கள் உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர, விளம்பரத்திற்காக இருக்கக் கூடாது என்று மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

இன்று கர்னாலில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விளம்பரத்திற்காக இளையோர் நலன் குறித்து தவறான தகவல்களை பரப்பக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு மனோகர்லால் கூறினார்.

<<<<<<>>>>>>

முதுநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வு இ ன்று நடைபெற்றது.

நாடு முழுவதும் **339** நகரங்களின் ஆயிரத்து **111** மையங்களில் இந்த தேர்வு நடைபெற்றது.

**2** லட்சத்து **65** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த தேர்வை எழுதியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஜெய்பூரில் உள்ள இரண்டு மையங்களில் மட்டும் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக இந்த மையங்களை சேர்ந்த **2** ஆயிரத்து **445** பேருக்கு மறு தேர்வு அடுத்த மாதம் **5**-ஆம் தேதி நடைபெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மணிப்பூரில் ஏழு தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த 24 மணிநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்புப்படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அஸ்ஸாமில் போதைப்பொருளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த ஐந்தாண்டுகளில் 3 ஆயிரத்து 253 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக 26 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் இன்று பார்வையிட்டார்.

**Chitrakoot-**ல் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட அவர், அப்பகுதி மக்களுடன் உரையாடினார்.

இப்பகுதியில் இயல்புநிலை திரும்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் தனியார் பங்களிப்புடன் ஊரக பகுதிகளுக்கான சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து பரிசலிக்கப்பட்டு வருவதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு **Sharadwat Mukherjee** கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனியார் மருத்துவக்கல்லூரிகளோடு இணைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மேகாலயாவில் விளையாட்டுத்துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு **Wailadmiki Shylla** கூறியுள்ளார்.

ஷில்லாங்கில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், **2018**-ஆம் ஆண்டு **40** கோடி ரூபாயாக இருந்த இந்த துறைக்கான நிதி ஒதுக்கீடு தற்போது **840** கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக கூறினார்.

சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்லும் மேகாலயாவை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பரிசுத்தொகையும் உயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிலி உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களில் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

அரசு முறைப்பயணமாக சிலி சென்றுள்ள வர்த்தகத்துறை செயலர் திரு ராஜேஷ் அகர்வால், அந்நாட்டு துணை அமைச்சர் திருமதி **Paula Estevez Weinstein**-ஐ சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பேச்சுக்களை நடப்பாண்டு இறுதிக்குள் இறுதி செய்வதென பரஸ்பரம் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக சீன அதிபர் திரு **Xi Jinping** கிர்கிஸ்தான் சென்றடைந்தார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்பதை ஆர்வமுடன் எதிர்நோக்கி இருப்பதாக கூறியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் சீனா வழங்கும் என்றும் திரு **Xi Jinping** தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

புனேயில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், நான்கு வெள்ளி பதக்கங்களை வென்றது.

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Dev Ruparelia**-வும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Ishita Negi** தங்கப்பதக்கத்தை வென்றனர்.

இப்பிரிவுகளில் **Nishchal Chand-**ம் **Gatha Ganesh Suryawanshi-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Punith Suresh — Pavan Suresh** இணை தங்கப்பதக்கம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Diya — Keerthy** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Punith Suresh — Deepak Raj Aditi** இணையும், வெள்ளிப்பதக்கம் வென்றன.

--------

எகிப்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan — Dev Javia** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **6-4, 6-3** என்ற செட் கணக்கில், எகிப்தின் **Elsayed — Ibrahim** இணையை வென்றது.

-----------------

இந்தியா — சீனா இடையேயான இரண்டாவது ஜூனியர் நட்புணர்வு ஹாக்கிப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

சீனாவின் **Dalian-**ல் நடைபெற்ற இப்போட்டியில், இரு அணிகளும் தலா **6** கோல் போட்டன.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா ஒரு போட்டியில் வெற்றிபெற்று முன்னிலை வகிக்கிறது.

-----------------

துபாயில் நடைபெற்றுவரும் ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<<<<<<END>>>>>>